# வரலாறு

## இராசரட்டை நாகரிகம்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education


தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

## 1ம் விஜயபாகு

⇒ பலவிதமான பிரச்சினைகள், சவால்களின் மத்தியில் உருகுணையின் ஆட்சியை உறுதி செய்தமை.

⇒ சோழர்களுக்கு எதிராகப் படை திரட்டி உபாயங்களைக் கையாண்டு சோழரை வெற்றி கொள்ளல்.



⇒ நாட்டை ஒன்றிணைத்தல்

⇒ பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு முன்னைய மரபுகளுக்கு அமைய ஆட்சியை முன்னெடுத்துச் செல்லல்

⇒ உபராஜா, ஆதிபாத போன்ற பதவிகளை ஏற்படுத்தி பிரதேச நிர்வாகத்தை வலிமையுறச் செய்தல்

⇒ வீழ்ச்சியுற்று இருந்த நீர்ப்பாசனத்துறையை முன்னேற்றுதல் - வாவி அமைத்தல்

⇒ விவசாயத்தைக் கட்டியெழுப்புதல்

⇒ பௌத்த சாசனத்தின் எழுச்சிக்காக செயற்படல்

- ⇒ பர்மாவிலிருந்து உபசம்பதா பிக்குகளை வரவழைத்தல், திரிபீடக நூலைக் கொண்டு வருதல்
- ⇒ சமய வழிபாட்டிடங்களைப் புனர் நிர்மாணம் செய்தமை
- ⇒ வெல்கம விகாரை, ஜம்புகோள விகாரை, தம்புள்ள விகாரை, கிரிகண்ட விகாரை என்பன
- ⇒ சிவனொளி பாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்

⇒ சைவ சமயத்திற்கும் அனுசரணை வழங்குதல்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இலங்கை வரலாற்றில் பொலநறுவை இராசதானியின் 1வது சிங்கள மன்னனாகவும் விடுதலை வீரனாகவும் விளங்குபவன் விஜயபாகு ஆவான். இவன் மானவர்மன் வழி வந்த மகாசாமி மொக்கல்லானனுக்கும், தடோபதீசன் வழிவந்த லோகிதாவுக்கும் உருகுணையிலே மகனாகப் பிறந்தான். இவன் பிறக்கின்ற போது இவனது குடும்பத்தினர் சாதாரண நிலையிலே காணப்பட்டனர். ஆனால் 1ஆம் விஜயபாகு மாவீரானக எழுச்சி பெற்று சோழரை இலங்கையில் இருந்து வெளியேற்றி பொலநறுவையில் ஆட்சி புரிந்ததனால் விடுதலை வீரனாகவும் இலட்சிய வீரனாகவும் புகழப்படுகின்றான். இவன் இலங்கையில் மேற்கொண்ட சாதனை பற்றியும், சேவைகள் பற்றியும் அறிவதற்கு சூளவம்சம், பனாகடுவ செப்பேடு, அம்பகமுவ கல்வெட்டு என்பன முக்கியத்துவம் பெறுகின்றது. பனாகடுவ செப்பேடு அவனது அரசியல் சாதனை பற்றியும், சிறுவயதில் இருந்து புத்தரஜ (சித்தாறும்பி புத்தநாயகன்) என்பவன் இவனை வளர்த்தமை பற்றியும் குறிப்பிடுகிறது. இதனை விட அம்பகமுவ கல்வெட்டு இவன் சிவனொளிபாதமலை பகுதியில் உள்ள மடங்களுக்கு தானம் வழங்கியது பற்றியும் பௌத்த மதத்திற்கு ஆற்றிய சேவை பற்றியும் குறிப்பிடப்படுகிறது.

1ஆம் விஜயபாகு சிறுவயது முதல் சிறந்த ஒரு வீரனாகவும் ஆற்றல் பொருந்திய தலைவனாகவும் வளர்ந்து அரிய பல சாதனைகளை நிகழ்த்தி உள்ளான். அவனது சாதனைகளில் அந்நியர் ஆட்சியிலிருந்து நாட்டினை மீட்டு அதனை ஒன்றிணைத்தமை நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைத்தமை. பௌத்த சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியமை என்பன சிறப்பான அம்சங்கள் ஆகும்.

நீண்ட காலமாக குழப்பத்தில் இருந்து உருகுணை ஆட்சி யாருமில்லாத நிலையில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த விக்கிரம பாண்டியன் என்பவன் உருகுணை நோக்கி வந்து ஆட்சியை தன் வசப்படுத்தினான். இவன் சோழருக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடத்திய போதிலும் அவற்றில் அவன் வெற்றி பெறவில்லை. இந்நிலையில் வட இந்தியாவில் இருந்து இலங்கை வந்த ஜகதீபாலன் விக்கிரம பாண்டியனைத் துரத்திவிட்டு உருகுணையில் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டான். ஜகதீகபாலன் சோழருக்கு எதிரான பல போராட்டங்களை முன்னெடுத்து இறுதியில் சோழருடனான போர் ஒன்றில் கொல்லப்பட்டான். இதனால் உருகுணையில் சுதந்திர வீரர்கள் எவரும் எழுச்சி பெற முடியாத சூழ்நிலை நிலவியது. இறுதியில் பராக்கிரம பாண்டியன் என்பவன் உருகுணையின் ஆட்சியைப் பிடித்த போதிலும் அவனும் சோழப்படையெடுப்புக்கு இரையானான். இவ்வாறு சோழருக்கு எதிரான பல்வேறு போராட்டங்கள் உருகுணையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை சோழரால் தோற்கடிக்கப்பட்டன.




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சோழரது கல்வெட்டுக்களில் மதனராசன் வீரசலாமேகன் போன்ற பெயர்களை குறிப்பிடப்படுகின்றது. அவர்களே உருகுணையில் இருந்து படையெடுத்து வந்ததாக கூறுகிறது. பெயர் வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் உருகுணையிலிருந்து சோழருக்கு எதிரான போராட்டம் இடம் பெற்றதனை சோழர் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. இவ்வாறு சோழருக்கு எதிரான போராட்டம் தோல்வியுற்ற நிலையில் விஜயபாகு என்ற மாவீரன் எழுச்சி பெற்றான் என தெரிய வருகின்றது

கீர்த்தி குமாரன் என்ற இயற் பெயரைக் கொண்ட இவன் பின்னாளில் தனது விடுதலைப் போராட்டத்தை நடாத்துவதற்கு தனது பெயரை 1ஆம் விஜயபாகு என மாற்றிக் கொண்டான். மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள தனது பரம்பரை அரச பரம்பரை எனவும் ஆட்சி பெறுவதற்கு தனக்கு உரித்து உள்ளது எனவும் மக்களுக்கு தெளிவு படுத்தினான். புத்தராஜனின் உதவியுடன் படை ஒன்றை திரட்டி உருகுணையின் ஆட்சியை கைப்பற்ற முனைந்தான். லோக என்பவனை தோற்கடித்ததன் மூலம் உருகுணையின் ஒரு பகுதியைக் கைப்பற்றினான். பின்னர் கேசதாது காசியப்பனைக் வென்று உருகுணை முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததோடு கி.பி. 1055ஆம் ஆண்டு கதிர்காமத்தை தலைநகராகக் கொண்டு உருகுணை பிரதேசத்தின் ஆட்சியாளனாக முடிசூடிக் கொண்டான்.

உருகுணையில் அரசனாக இருந்த போது சோழருக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்காக மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி படை திரட்டினான். சோழருக்கு எதிராக இவன் செயற்படுவதை அறிந்த சோழர்கள் இவனை கொல்வதற்காக பல்வேறு படையெடுப்புக்களை மேற் கொண்டனர். அவ்வேளை தனது படைகளுடன் பின்வாங்கி உருகுணையில் இருந்த காப்பரன்களுள் மறைந்துறைந்தான். உருகுணையில் காணப்பட்ட அடர்ந்த காடுகளும் குன்றுகளும் நதிகளும் இவனது காப்பரனாக காணப்பட்டது. தன்னை தயார்படுத்தி கொண்ட பின்னர் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தான்

1ஆம் விஜயபாகு மன்னன் தனது நீண்ட கால கனவாகிய சோழரை வெளியேற்றும் கனவை நனவாக்கும் நோக்குடன் சந்தர்ப்பம் பார்த்து இருந்தான். அவ்வேளையில் கி.பி 1065ஆம் ஆண்டு பொலநறுவையில் சோழருக்கு எதிரான கலவரம் ஒன்று இடம் பெற்றது. அதாவது சோழர்களின் வரி நடைமுறையை எதிர்த்து கலவரம் இடம் பெற்ற போது அதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட 1ஆம் விஜயபாகு படையெடுத்தான் ஆரம்பத்தில் அவனது படையெடுப்பு வெற்றி பெற்ற போதும் மீண்டும் படையெடுத்த சோழர்கள் 1ஆம் விஜயபாகுவை தோற்கடித்து மீண்டும் வெற்ற பெற்றனர். தோல்வியடைந்த 1ஆம் விஜயபாகு பின்வாங்கி வாகிரிகல என்ற இடம் சென்று மறைந்து கொண்டான்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சிறிது நாட்களின் பின்னர் மீண்டும் உருகுணை சென்ற 1ஆம் விஜயபாகு அங்கே மீண்டும் ஒரு படையை தயார் செய்து கி.பி 1067ஆம் ஆண்டு பொலநறுவை நோக்கி படையெடுத்தான். அச் சந்தர்ப்பத்திலும் பொலநறுவை கைப்பற்றப்பட்ட போதிலும், மீண்டும் சோழரது ஆட்சியில் தோல்வியடைந்து பின்வாங்கினான் இவ்வாறு இரு தடவைகள் தோல்வியுற்றமைக்கு சரியான திட்டமிடல் இல்லாதது காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் விஜயபாகுவின் படை வீரர்கள் போர் நடைபெற்ற வேளையில் சோழரது படை பக்கம் சேர்ந்து தாக்கியதால் இவன் தோல்வியுற்றான் என கூறப்படுகிறது.

முன்னைய போரில் ஏற்பட்ட அனுபவம், சோழரின் பலம் முதலானவற்றைக் கொண்டு தன்னை தயார்படுத்திய விஜயபாகு தனது படையை மூன்று அணியாக வகுத்து அதில் இரண்டு படைப்பிரிவை கலாவாவியை தாண்டி மாந்தை துறைமுக பிரிவில் நிறுத்தி சோழரின் உதவிப் படைவரின் அதனைத் தடுப்பதற்காக நிறுத்தினான். கிழக்குப் புறமாகச் சென்ற படையணி சக்காமத்திலும், மற்றும் இடங்களில் இருந்து படை முகாம்களை முறியடித்துப் பொலநறுவையை நெருங்கியது. திட்டமிட்ட படி கி.பி 1070 ஆம் ஆண்டு படையெடுத்து சோழர் தோற்கடிக்கப்பட்டனர். இதன் மூலம் 77 ஆண்டுகால சோழர்கள் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதோடு " விடுதலை வீரன்" என்ற சிறப்பையும் பெற்றுக் கொண்டான். சோழப் படைகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அவர்கள் சோழ நாட்டிற்கு விரட்டப்பட்டனர். சில சோழப் படைவீரர் இலங்கையில் தங்க விருப்பம் தெரிவித்ததால் அவர்களை வேலைக்காரப்படை என்ற பெயரில் இலங்கையிலே முக்கியமான காவல் பணிகளில் அமர்த்தினான்.

1ஆம் விஜயபாகு 1070ஆம் ஆண்டு சோழரை இலங்கையில் இருந்து வெளிறேற்றிய பின்னர் கி.பி 1073 ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் ஒரு அரச மாளிகையை நிறுவி அங்கே முடிசூடிக் கொண்டான். அநுராதபுரத்தை தொடர்ந்தும் தலைநகராக்கிய இவன் தொடர்ந்தும் தலைநகரை அங்கே வைத்திருக்காமல் பொலநறுவையை தலைநகராக்கினான். இவ்வாறு 1ஆம் விஜயபாகு பொலநறுவையை தலைநகராக்கியமைக்கு அரசியல், பொருளாதார கலாசார காரணிகள் துணை புரிந்ததாக தெரிய வருகின்றது.

பொலநறுவை இலங்கையின் ஏனைய பகுதிகளை கண்காணிக்கக் கூடியதான ஓரளவு மத்திய பகுதியில் அமைந்து இருந்தமையால் பொலநறுவையை தலைநகராக்கியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. அது மாத்திரமல்லாது இயற்கை அரனும் பாதுகாப்பும் உடையதாக விளங்குவதாலும், பொலநறுவை சிறந்தவளம் கொண்ட பகுதியாக காணப்படுவதாலும், விவசாயத்திற்கு ஏற்ற இடமாக விளங்கியதாலும் பொலநறுவையை தலைநகர் ஆக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சமயப்பணி

1ஆம் விஜயபாகு மன்னன் ஆற்றிய சேவைகளுள் மகத்தான சேவையாக குறிப்பிடப்படுவது பௌத்த சமயத்திற்கு ஆற்றிய சேவையாகும். இவன் ஏனைய சமயங்களையும் மதிக்கின்ற ஒரு சமயப் பொறை உடையவன் என சுட்டிக்காட்டப்பட்டதோடு பௌத்த சமயத்திற்கு அதிகளவான சேவையை புரிந்த ஒருவனாக காணப்பட்டான். அவ்வகையில் 77 ஆண்டுகால சோழராட்சியால் அழிவுற்றிருந்த பௌத்த சமயம் மீளவும் புத்துயிர் பெறும் வகையில் பல்வேறு புனருத்தாரணப் பணிகளை மேற்கொண்டான். அவ்வகையில் வெல்கம் விகாரை, ஜம்புகோள விகாரை, தம்புள்ள விகாரை கிரிகண்ட விகாரை என்பனவற்றை புனரமைத்தான். மேலும் இவன் தாயும் தந்தையும் தகனம் செய்யப்பட்டிருந்த இடங்களில் விகாரைகளை நிர்மாணித்ததாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக திஸ்ஸ மகாராமையில் சந்தகிரி விகாரை-யயும் தெவிநுவரவில் உருவெல என்ற விகாரையையும் நிர்மாணித்ததாக கூறப்படுகின்றது. இவை தவிர பௌத்த சங்கத்தில் இருந்த ஒழுக்கமற்ற பிக்குகளை நீக்கி நல்ல ஒழுக்கம் உள்ள பிக்குகளை நியமித்தான்.

மேலும் 1ஆம் விஜயபாகு கைவிடப்பட்ட சமயப்பணியை மீளவும் ஆரம்பித்தான் நல்ல பிக்குகளை உருவாக்கும் பொருட்டு கைவிடப்பட்டிருந்த உபசம்பதா சடங்கை மீளவும் கொண்டு வந்தான். பர்மாவில் இருந்து பிக்குகளை வரவழைத்து இச் சடங்கினை மேற் கொண்டதாக தெரிய வருகின்றது. இலங்கையில் காணப்பட்ட பௌத்த கட்டடங்கள் சிற்பங்கள் முதலானவற்றை புனரமைத்ததோடு பௌத்த விழாக்களை மீளவும் செயற்படுத்தினான். புனித தந்ததாது கொண்ட மாளிகை அமைக்கப்பட்டது.


சோழர்கள் சைவசமயத்தை பரப்பிச் சென்றதால் இலங்கையில் சைவம் பரவல் அடைந்து காணப்பட்டது. இவன் சைவசமயத்திற்கு எந்தவொரு தீங்கும் செய்யவில்லை. திருகோணமலையிலே இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற பிராமண குடியிருப்பை புதுப்பித்து வழங்கி அதற்கு தானமும் கொடுத்து அதற்கு " விஜயராஜ சதுர்வேத மங்கலம்" எனவும் பெயரிட்டான். இதனால் விஜயபாகுவை சமயப் பொறை உடையவன் என வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன.



தொகுப்பு : செல்வி. து. இராசலிங்கம், ஆசிரியர் - (வரலாறு) (யா/நயினாதீவு மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேலும் இவன் இலங்கையின் பல பகுதிகளுக்கு பிக்குகளை அனுப்பி தர்ம பிரசார நடவடிக்கையை முன்னெடுத்தான். இது மாத்திரமல்லாது புத்த பிக்குகளுக்கும், விகாரைகளுக்கும் ஏராளமான தானம் வழங்கினான். ஆழிசாரா கால்வாயை புனரமைத்த இவன் அக் கால்வாய் மூலம் பெறப்பட்ட நிதியை சங்கத்தாருக்கு கொடுத்தான். சிவனொளி பாதமலையில் இருந்த மடங்களுக்கு தானம் அளித்து அன்னதான நிகழ்வுகளையும், தாகசாந்தி சேவைகளையும் வழங்கினான். அத்துடன் சிவனொளி பாதமலைக்கு “ கீலிமலைய” என்ற கிராமத்தை தானமாக வழங்கினான் எனக் குறிப்பிட்டப்படுகின்றது. இவன் சிவனொளிபாத மலைப் பகுதியில் மேற் கொண்ட தானதர்மப் பணிகள் பற்றி “ அம்பகமுவ” கல்வெட்டில்



புத்தரது பற்சின்னத்தை பாதுகாப்பபுக்காக பொலநறுவைக்குக் கொண்டு வந்து, அதனை வழிபடவும், பாதுகாக்கவும் ஏற்ற வகையில் தந்ததாது விகாரை ஒன்றை நிறுவினான். பற்சின்ன வழிபாட்டை முதன்மைப்படுத்திய இவன் பிற்காலப்பகுதியில் தந்ததாது விகாரை வழிபாடு செல்வாக்குப் பெற வழிகாட்டினான். இந்தியாவின் புத்தகாயவிலுள்ள புனித போதி மரத்துக்குத் தன் காணிக்கையாக மிகவும் விலையுயர்ந்த முத்துக்கள், மணிகள் இரத்தினங்கள் பலவற்றை தூதுவர் வாயிலாக அனுப்பி வைத்தான் என சூளவம்சம் குறிப்பிடுகிறது. அத்துடன் இலங்கையிலிருந்த பௌத்த சன்னியாசிகளும், பௌத்தமக்களும், புத்தகாயவிற்கு யாத்திரை செய்வதற்கு வசதி செய்து கொடுத்தான். மேலும் தாழ்ந்த வகுப்பினர் திருவடியை தரிசிப்பதற்கென ஒரு தனியான தளத்தை அமைத்தமை பற்றி கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருளாதாரப் பணி

விஜயபாகு மேற்கொண்ட பணிகளுள் பொருளதாரப்பணிக்கு இவர் ஆற்றிய சேவை மகத்தானது ஆகும். இந்த வகையில் உருகுணைக்கு தொடர்புகளை மேற்கொண்டான் என தெரிய வருகின்றது. கி.பி 1070ஆம் ஆண்டு சோழரை இலங்கையில் இருந்து வெளியேற்றிய பின்னர் நாட்டிலே அழிவுற்று இருந்து பொருளாதார கட்டமைப்பை மீளவும் சீர் செய்தான். பழயை குளங்களைப் புதுப்பித்ததோடு பத்தகுணவாவி (பற்றகுணவாவி) என்ற குளத்தை நிறுவியதோடு பண்டாவாவி, மகாகணதரவ வாவி, நாற்சதுர வாவி, மின்னேரியா, யோதவாாவி முதலான பல குளங்களை புனரமைத்தான். ஆழிசாரா கால்வாயை திருத்தி அக்கால்வாய் மூலம் மின்னேரியாவையும் தொர்புபட வைத்தான். பல ஆறுகளையும், சிற்றாறுகளையும் மறித்து கால்வாய் ஊடாக நீரை வயலுக்கு விநியோகித்தான் என சூளவமசம் கூறுகிறது.

மேலும் நாட்டில் பின் தங்கியிருந்த பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தியதோடு விவசாயத்தையும் நல்ல நிலைக்கு கொண்டுவந்தான். பொலநறுவையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பினான். அத்துடன் யானை, கறுவா, மிளகு, இரத்தினக்கல் முதலானவற்றின் வியாபாரத்தை அதிகரித்ததோடு இந்தியா, பர்மா, சீனா, தாய்வான் முதலான நாடுகளுடன் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டான். நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற் கொண்டதோடு வணிக குழுக்களை நிறுவி வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டான். புதிதாக்கல், புனரமைப்பு, புனருத்தாரணம் என்பனவே இவனது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முக்கிய தன்மைகளாக இருந்தது எனலாம்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அயல் நாட்டுத் தொடர்புகள;

விஜயபாகு வெளிநாட்டு தொடர்பை மேற்கொண்ட வகையிலே சிறப்பான ஒருவனாக சுட்டிக் காட்டப்படுகின்றான். அந்த வகையில் சோழர்கள் மீண்டும் இலங்கையை நோக்கி படையெடுத்து வரலாம் என்ற அச்சம் காரணமாக சோழருக்கு எதிரான அரச வம்சத்தோடு நட்பை ஏற்படுத்திக் கொண்டான். இவன் உருகுணையின் அரசனாக இருந்த போது பர்மா தேசத்துடன் வணிக ரீதியாகவும், சமய ரீதியாகவும் தொடர்புகளைப பேணி வந்ததாக தெரிய வருகின்றது. பின்னாளில் பாண்டிய, கலிங்கம், பாலர், சாளுக்கியர் முதலான வம்சங்களுடன் தொடர்புகளை பேணி வந்ததாக தெரிய வருகிறது.

அந்த வகையில் சோழரால் முன்னர் கைது செய்யப்பட்ட அயோத்தி ஜகதீபாலனது மகளான லீலாவதியை தன் பட்டத்தரசியாக ஏற்றுக் கொண்ட விஜயபாகு பின்னர் கலிங்க இளவரசியான திரிலோக சுந்தரியை தன் இரண்டாவது பட்டத்தரசியாக்கினான். எனவே கலிங்கத்திற்கும், இலங்கைக்கும் இடையேயான உறவுநிலை பலம் பெற்று காணப்பட்டது. தனது சகோதரி மித்தாவை பாண்டிய இளவரசனுக்கு திருமணம் செய்து வைத்ததுடன் பாண்டியருடன் நட்புறவைப் பேணினான். இவ்வாறு உறவின் மூலம் அரசனைப் பலப்படுத்திய விஜயபாகு பின்னாளில் நட்பு ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தினான் என தெரிய வருகின்றது. அந்த வகையில் சாளுக்கிய வம்ச மன்னன் 6ஆம் விக்கிரமாதித்தனும், விஜயபாகுவும் தூதுக்குழுக்களையும், வெகுமதிகளையும் தமக்குள் பரிமாறிக் கொண்டதாக குறிப்பிடப்படுகிறது

மேலும் விஜயபாகுவின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் சோழ அரசுக்கும், இலங்கைக்கும் சுமூக உறவுகள் நிலவியதாக கூறப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழனின் மகளொருத்தியை இலங்கை இளவரசன் ஒருவன் மணம் செய்ததால் 1ம் பராந்தகன் காலத்திலிருந்து இரு அரச குடும்பங்களிடையே நிலவி வந்த பகைமை முடிவெய்தியது. இவ்வாறாக விஜயபாகு தன் நாட்டின் சுதந்திரத்தை பேணுவதில் குறிக்கோளாகக் கொண்ட அயல்நாட்டுக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தான். இக் கொள்கையின் விளைவாக நாடு அமைதிபெற்று உள்நாட்டு அபிவிருத்தி வேகமாக ஏற்படுத்தப்பட்டது.




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உள்நாட்டுக் கலவரங்களை கட்டுப்படுத்தியமை

விஜயபாகு மன்னன் கி.பி 1070ம் ஆண்டு சோழரை இலங்கையிலிருந்து வெளியேற்றிய பின்னர் இலங்கையை அபிவிருத்தி அடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டான். அந்த வகையிலே இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் நிர்வாக நடவடிக்கையை ஒன்றிணைத்தான். அந்தவகையில் சமய பொருளாதார பணிகளை மேற்கொண்டதோடு அவனுக்கு எதிராக பல கலவரங்களும் இடம்பெற்றன. 1070ம் ஆண்டு சோழரை இலங்கையிலிருந்து வெளியேற்றிய பின்னர் ஆதிமலையன் என்ற இவனது தளபதி ஒருவன் ஆட்சியை கைப்பற்றும் நோக்குடன் பெரும் கலவரங்களில் ஈடுபட்டான். அவ்வேளை தனது நுட்பமான போரியல் தந்திரத்தை கையாண்டு கலவரத்தைத் முறியடித்தான். இதன் மூலம் சிறந்த வீரனாகக் காணப்பட்டான்.

கி.பி 1074ம் ஆண்டு அளவில் உயர் பதவிகளில் இருந்த இவனது சகோதரர் மூவர் கலவரங்களில் ஈடுபட்டதாக தெரிய வருகின்றது. அந்தவகையிலே உருகுணை மலையரட்டை, தக்கணதேசம் ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றிய அவர்கள் தம்மை அங்கு அரசர்களாகப் பிரகடனப்படுத்தினர். இதனால் ஆத்திரமும், அச்சமும் அடைந்த விஜயபாகு உடனடியாக, விஜயபாகு தனது நம்பிக்கைக்குரிய தளபதியான வீரபாகு என்பவன் தலைமையில் படை ஒன்றை திரட்டினான். தனது சகோதரர்களின் கலவரங்களை கட்டுப்படுத்தியதோடு உருகுணைப் பகுதிக்கு உபராஜனாக வீரபாகுவை நியமித்தான்

விஜயபாகு எதிர்கொண்ட கலவரங்களில் மிகவும் பயங்கரமான கலவரமாக விளங்குவது வேளைக்கார கலவரம் ஆகும். 1085ம் ஆண்டு வேளைக்காரர் விஜயபாகுவிற்கு எதிராக கலவரத்தில் ஈடுபட்டனர். இதற்கான காரணம், யாதெனில் ஒருமுறை இலங்கையில் இருந்து சேரநாட்டிற்கு வணிகம் செய்வதற்கு சென்ற இலங்கையரை சிறைபிடித்த சோழ மன்னன் அவர்களிடம் இருந்த பொருட்களை பறித்தது மட்டுமல்லாது அவர்களை தாக்கி துன்புறுத்தி இலங்கைக்கு அனுப்பி வைத்தான். இதனால் ஆத்திரமடைந்த விஜயபாகு இலங்கையில் வணிகத்திற்கு வந்து சோழர்களை சிறைபிடித்து அவர்களின் ஆடை-களை களைந்து அவர்களுக்கு பெண்கள் அணியும் ஆடைகளை அணிவித்து சோழநாட்டுக்கு அனுப்பி வைத்தான். அது மட்டுமல்ல சோழநாட்டின் மீது படையெடுக்க திட்டமிட்டான். இதனை அறிந்த வேளைக்கார படைகள் தமது பூர்வீக நிலமான சோழ நாட்டின் மீது விஜயபாகு படையெடுக்க எண்ணுவது தமக்கு எதிரான செயல் எனக்கருதி கலவரத்தில் ஈடுபட்டனர். ஏற்கனவே வேளைக்காரப்படைகள் மிக முக்கியமான பொறுப்பில் இருந்ததால் இலகுவாக அரண்மனையில் விஜயபாகுவின் மனைவியர், பிள்ளைகளை சிறை பிடித்தனர் எனினும் விஜயபாகு அவர்களிடம் இருந்து தப்பித்து உருகுணை சென்று படைதிரட்டி வந்து வேளைகாரப்படையுடன் கடும் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான். வேளைக்கார படை முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டது. விஜயபாகுவின் ஆட்சி முடிவெய்திய காலத்தைச் சேர்ந்த வோளைக்காரப் பொறிப்பு ஒன்றில் தந்ததாது கோயிலைப் பாதுகாக்க வேளைக்காரப்படைப்பரிவினர் செய்து கொண்ட செயற்பாடுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கலகத்தின் பின்னரும் பொறுப்புள்ள கருமங்களை ஆற்ற வேளைக்காரப் பிரிவு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


தொகுப்பு : செல்வி. து. இராசலிங்கம், ஆசிரியர் - (வரலாறு) (யா/நயினாதீவு மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

எனவே மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்கும் போது பொலநறுவைக்கால மன்னர்களுள் சிறப்பான ஒருவானாக கருதப்படும் இவன் பல்துறைரீதியில் பல பணிகளை ஆற்றியமை புலப்படுகிறது.









Copyright © www.e-thaksalawa.moe.gov.lk